DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 83/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father / Husband Name | ராமசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 21.05.2025

**குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்து நான் சொல்லி தயார்செய்யப்பட்டதா என்றால் ஆமாம். எதிரிக்கு சொந்த ஊர் திருச்சியில் உள்ள சீனிவாசநல்லூர் ஆகும். எதிரி முசிறிக்கு வாடகைக்கு வந்துள்ளார். எதிரியை எனக்கு பிரபு என்பவரின் மூலமாக பழக்கம் ஆவார். பிரபுவுக்கும் எதிரிக்கும் எவ்வாறு பழக்கம் என்றால் இவ்வழக்கின் எதிரியான மாலதியின் கணவருடைய நண்பர் ஆவார். எனக்கு எதிரியின் கணவர் முதலில் பழக்கம் ஆவார். பிறகு எதிரி பழக்கமானர். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றுள்ளேன். எதிரியும் என் வீட்டிற்கு வந்துள்ளார். எதிரிக்கும் எனக்கும் இன்றைய தேதியில் இருந்து சுமார் 10 வருடங்களாக பழக்கம். எதிரி என்னிடம் 2017 ம் வருடம் டிசம்பவர் மாதம் முதல் வாரத்தில் பணம் கேட்டார். தேதி குறிப்பிட்டு தெரியாது. நான் எதிரிக்கு 2018 ம் வருடம் ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் உண்மையாக பணம் கொடுத்திருந்தால் சரியான தேதியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும் நான் பணம் கொடுக்காததால் தான் தேதியை குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் காளான் பண்ணை அமைக்க பணம் கடனாக கேட்டிருந்தார். மேற்படி பண்ணையை நான் சீனிவாசநல்லூரில் சென்று பார்த்துள்ளேன். நான் பணத்தை எதிரியிடம் சோத்துப்பாக்கத்தில் உள்ள என்னுடைய குரு மங்களா பைனான்ஸில் வைத்து கொடுத்தேன். மேற்படி நிதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. அதன் பதிவு எண் 88/2014 ஆகும். நான் அந்த நிறுவனத்தை ஆரம்பித்தது 2015 ல் ஆரம்பித்தேன். பொதுவாக நிதிநிறுவனத்தில் கடன் கொடுக்கும் போது ஆவணங்களை பெற்று கையொப்பம் பெறுவார்கள் நான் எதிரியிடம் கையொப்பம் பெறவில்லை.

2. நான் தனிப்பட்ட முறையில் பணம் கொடுத்திருந்தால் நான் கையொப்பம் வாங்க தேவையில்லை என்றாலும் நான் நிதி நிறுவனத்தின் மூலம் பணம் கொடுத்திருந்தால் ஆவணங்களை பெற்று கையொப்பம் பெற்றிருக்க வேண்டும்

என்றாலும் சரியல்ல. எதிரி ஒரு வாரத்தில் பணம் திருப்பி தருவதாக சொன்னதால் நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. மேற்படி விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்திலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ மற்றும் வழக்கின் ஆவணங்களிளோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் பணம் கொடுத்த விவரத்தை நிதிநிறுவனத்தின் ஏதாவது ஒரு கோப்பில் குறிப்பிட்டு வைத்துள்ளீர்களா என்றால் வைத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எதிரி என்னிடம் கடனாக 6 லட்சத்து 50 ஆயிரம் கேட்டார்கள். நான் அதனை ரொக்கமாக தான் கொடுத்தேன். RBI விதியின் படி பொதுவாக நிதிநிறுவனத்தை பொருத்தவரை பெரிய தொகையை ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கடன் கொடுக்கும் போது சாட்சிகள் இருந்தார்களா என்றால் மேனேஜர் கணேஷ் மற்றும் அலுவலக ஊழியர்கள் மற்றும் எதிரியின் கணவர் முன்னிலையில் கொடுத்தேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் மேற்படி விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் எதிரியிடம் கடன் கொடுத்ததை எவ்வளவு நாட்கள் கழித்து கேட்டேன் என்றால் ஒரு வாரத்திற்கு பிறகு நான் போன் மூலமும், நேரிலும் கேட்டேன். நான் கடைசியாக எதிரியிடம் எப்போது பணம் கேட்டேன் என்றால் 02.12.2020 ம் தேதி அன்று திருச்சியில் சீனிவாசநல்லூருக்கு சென்று கேட்டேன்.

3. வழக்கு காசோலையை என்னிடம் எப்படி கொடுத்தார்கள் என்றால் நிரப்பப்பட்ட காசோலையை கொடுத்தார்கள். மேற்படி காசோலையை எதிரி மாலதி கொடுக்கும் போது அவரின் கணவர் உடன் இருந்தார். வழக்கு காசோலையை யார் நிரப்பினார்கள் என்றால் காசோலை முன்னதாகவே நிரப்பப்பட்டு என் எதிரில் தான் எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார். காசோலையை யார் நிரப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள விவரம் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் எதிரில் எதிரி காசோலையை பூர்த்தி செய்யவில்லை என்றாலும் காசோலையில் மை வேறு வேறாக உள்ளது என்றாலும் அவ்வாறு எதிரி பூர்த்தி செய்திருந்தால் ஒரே மையாக இருக்கும் என்றாலும் வழக்கிற்காக வேறுவகையில் கிடைத்த காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மேற்படி காசோலை 07.01.2021 ன் பின்தேதியிட்டு கொடுத்த காசோலையை நான் அதே தேதியில் சென்ரல் பேங்க் ஆப் இந்தியா சோத்துப்பாக்கம் கிளையில் டெபாசிட் செய்தேன். மேற்படி காசோலை 11.01.2021 ம் தேதி அன்று போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. காசோலை திருப்பப்பட்ட பிறகு நான் வழக்கறிஞர் மூலம் 21.01.2021 ம் தேதி எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

4. அறிவிப்பு அனுபிய பிறகு நான் எதிரியடம் பணத்தை போன் மூலமாகவோ நேரடியாகவோ கேட்டகவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி பெற்றுக்கொள்ளவில்லை. நான் சொன்ன விலாசத்தில் எதிரி இருந்திருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டிருப்பார் என்றாலும் அவ்வாறு இல்லை என்பதால் பெற்றுக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி வாங்க மறுத்துவிட்டார் என்று வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். எதிரிக்கும் எனக்கும் நட்பு இல்லை என்றாலும் வேறு வகையில் கிடைத்த காசோலையை வைத்து நான் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியும் எதிரியின் கணவரும் வழக்கு போடுவதற்கு முன்னர் வரை அவர்கள் சோத்துப்பாக்கமோ மதுராந்தகமோ வந்ததில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக மட்டுமே மதுராந்தகம் வந்துள்ளார்கள் என்றாலும்

சரியல்ல. எதிரி காளான் தொழில் செய்யவில்லை என்றாலும் நான் நேரில் சென்று காளான் பண்ணைய பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய தக்கது என்றாலும் சரியல்ல.